# சீவகசிந்தாமணியில் பெருமிதம்சார் பண்பாட்டு படிமங்கள்

*முனைவர் மா. மலர்செல்வி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் என் ஜி பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383289

## நோக்கம்

*தமிழ்க் காப்பியமரபு சமணர் காலத்தில் இருந்து தொடங்குகின்றது. தமிழ் இலக்கிய வகைகளில் தனிப்பாடல் முதல் வகையாகவும் நெடும்பாட்டு இரண்டாம் வகையாகவும் அதன் தொடர்ச்சியாக காப்பியங்களை வைத்துக் கொள்ள வேண்டும். காப்பிய உருவாக்கத்திற்கு தனிப்பாடல் அடிப்படையாக அமைகின்றன சங்கப்பாடல்கள் தன் உணர்ச்சிப் பாடல்கள். அவற்றில் ஒரே உணர்ச்சி மட்டும்தான் இருக்கும். காப்பியங்களில் பல்வேறு உணர்ச்சிகள் உண்டு. அவற்றில் கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தும் உணர்ச்சிகள் முக்கியமானதாகும். மெய்யின் மூலம் உணரப்படும் மெய்ப்பாட்டின் பெருமிதம்சார் உணர்வு சீவகசிந்தாமணி காப்பியத்தில் வெளிப்படும் இடங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## பெருமிதம்சார் படிமங்கள்

***"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"***

***(தொல்காப்பியம் 1203)***

*கல்வி, வீரம், புகழ், கொடை எனச் சொல்லப்பட்ட நான்கால் பெருமிதம் உண்டாகும்.*

*நாமகள் இலம்பகத்தில் சச்சந்தனின் வரலாறு கூறுமிடத்தில்*

***"நச்சு நாகத்தின் ஆரழல் சீற்றத்தன்
அச்ச முற்றடைந்தார்க்கு அமிர்த்து அன்னவன்"***

***(சீவகசிந்தாமணி, நாம.இல, பா.எ.157)***

*சச்சந்தன் நஞ்சினையுடைய நாகத்தைப் போலப் பகைவர்க்குத் தீயாகிய சினத்துடன் விளங்குபவன்; அச்சமுடன் சரண் அடைந்தவர்க்கு அமிழ்தம் போன்று இனிய தன்மையுடையவன் என்று கூறுகிறார், திருத்தக்கதேவர்.*

*நஞ்சுடைய நாகத்தின் சீற்றம் சச்சந்தனின் வீரத்திற்கு உவமையாகவும், அமிழ்தம் அவனது இனிமையான குணத்திற்கு உவமையகவும் கூறப்பட்டுள்ளது. இவ்வுவமைகள் அரசனைப் பற்றிய பெருமிதத்தைக் காட்சிப்படுத்துகின்றன.*

***"தொடுகொள் இனநிரை நெஞ்சு அதிரந் தாங்கு
முரசு முழங்கு நெடுநகர் அரசுதுயில் ஈயாது"***

***(பதிற்றுப்பத்து 12)***

*மேற்காண்பதிற்றுப்பத்து இரண்டாம் பத்து பாடலில் சேரனின் பேராண்மை விவரிக்கப்படுகிறது. சேரனின் வீரத்தைக் கண்டு பகைவர்கள் தங்களது அரண்மனையில் துயில் கொள்ளாமல் நடுநடுங்கினர் என குமட்டூர் கண்ணனார் பதிவு செய்துள்ளார்.*

*கோவிந்தையார் இலம்பகத்தில் வேடர்களுடன் சீவகன் போரிடும் பொழுது பெருமலையில் வரிசையாக வீழ்கின்ற பளிங்கு நிறம் போன்ற மழையினை காற்று சீறி எழுந்து 'கல்' என்று ஒலித்துத் தாக்கிச் சிதற அடிப்பது போல, தன் மேல் வேடர்கள் வரிசையுறப் பொழிந்த கொடிய நுனியையுடைய அம்பு மழையை, கணைகளை இடைவிடாது செலுத்தும் தன் வில்லினால் சீவகன் தடுத்து விலக்கினான்.*

***"மால்வரைத்தொடுத்து வீழ்ந்த மணிநிற மாரி தன்னைக்
கால் இரைத்து எழுந்து பாறக் கல்லெனப்புடைத்த தேபோல்
மேல் நிரைத்து எழுந்த வேடர் வெந்துனை அப்பு மாரி
கோல் நிரைத்து உமிழும் வில்லால் கோமகன்
விலக்கி னானே"***

***(சீவகசிந்தாமணி, கோவி.இல, பா.எ.451)***

*இங்கு வேடர்கள் விடுகின்ற அம்புகளுக்கு மழையும், சீவகன் விடுகின்ற அம்புகளுக்குக் காற்றும் உவமைப்படுத்தப்பட்டுள்ளன. மழையை வலிமை வாய்ந்த காற்று விலக்குவது*

*வேடர்களது அம்பு மழையை மிகுந்த வீரமுடைய சீவகன் தம் அம்புகளினால் விலக்கி வெற்றி கொண்டான். இந்நிகழ்வு சீவகனது வில்லாற்றலையும், அவனது புகழையும் எடுத்துக்காட்டும் பெருமிதம்சார் படிமக்காட்சிகளாக அமைகின்றன.*

*காந்தருவதத்தையார் இலம்பகத்தில் சீற்றம் கொண்ட பதுமுகன் மன்னர்களுக்கு தன் வீரத்தை நிரூபிக்கும் நிகழ்வு சிறந்த படிமமாக அமைகின்றது.*

***"…. வில்வாய் வெங்கணை தொடுத்து வாங்கிக்***
***கல்திரள் கழிந்து மண்ணுள் கரந்தது குளிப்ப எய்திட்டு***
***இற்றுஎமர் கல்வி என்றான் இடியேறும் ஏற்றோடு ஒப்பான்"***

***(சீவகசிந்தாமணி, காந்த.இல, பா.எ.756)***

*எங்கள் சொல்வன்மையேயன்றி மன்னர்களே! திரண்டிருந்து நீங்கள் எல்லாரும் எங்கள் வில்திறனையும் காணுங்கள் என்று கூறிய இடிக்கும் பேரிடி போன்ற பதுமுகன் வில்லை வளைத்துக் கொடிய அம்பு ஒன்றைத் தொடுக்க அது கற்களைப் பிளந்து மண்ணுக்குள் புகுந்து மறைந்துவிட்டது. அப்பொழுது எம்முடைய வில் வித்தை இத்தகையது என்று கூறினான்.*

*பதுமுகன் தனது கல்வியாலும், அக்கல்வியால் விளைந்த வீரத்தாலும் பெருமித உணர்வுடன் மன்னர்களுக்கிடையில் நிற்பது சிறந்த படிமமாக அமைந்து பெருமித உணர்வைத் தோற்றுவிக்கிறது.*

***"களம் புகல் ஓம்புமின், தெவ்விர்! போர் எதிர்ந்து***
***எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்***
***எண் தேர் செய்யும் தச்சன் திங்கள்***
***வலித்த கால் அன்னோனே"*** ***(புறம் 87).***

*என அதியமான் நெடுமான் அஞ்சியின் வீரத்தை ஔவையார் பெருமித உணர்வுடன் பறைசாற்றுகின்றார்.*

***"ஆழிஅம் கழனி தன்னுள் அம்பொடு கணையும் வித்திச்***
***சூழ்குடர்ப் பிணங்கள் மல்க விளைத்தபின் தொழிதிப் பல்பேய்க்கு***
***ஊழ்ப்படு குருதி நெய்யின் இறைச்சி சோறு ஊட்டி வென்றி வீழ்தர வேட்டு நின்றார் எய்துப வெகுளல் வேண்டா"***

***(சீவகசிந்தாமணி, காந்த.இல, பா.எ.757)***

*மேலும், சக்ரவியூகமாக வகுத்த படையாகிய விளைநிலத்தில் அம்பையும் தண்டாயுதத்தையும் விதைத்து, குடல்கள் கசியும்படி பிணங்களாகிய நெல்லை நிறைய விளைவித்து, போரில் இறந்துபட்ட பகைவர்களின் இரத்தமாகிய நெய்யுடன் ஊன் உடலாகிய சோற்றைக் கூட்டமாக உள்ள பல பேய்களுக்கும் ஊட்டி, வெற்றித்திருமகள் விரும்பக் களம்பல கண்டவர் இத்தெய்வத்தை அடைவர்; எனவே, நீங்கள் சினங்கொள்ள வேண்டா. ஏனெனில் அத்தகைய வீரம் கொண்டவர்கள் நீவர் அல்லர். ஆதலால் உங்களுக்குக் கோபம் வருதல் கூடாது என்று பலவாறு தன் வீரத்தினால் விளைந்த பெருமித உணர்வுடன் மன்னர்களுக்கு அறிவுரை கூறும் காட்சி, அச்சம் தரும் போர்க்களக்காட்சிகளைக் கூறி அஞ்சாது போரிட்டு வெற்றித்திருமகள் அருள் பெறுவோம் நாங்கள் என்று கூறுவது பெருமித உணர்வைத் தோற்றுவிக்கும் படிமக்காட்சி களை மனதில் காட்சியுடன் கூடிய கருத்துப் படிமமாய் பதியவைக்கின்றது.*

***"வானமுற நீண்டபுகழ் மாரிமழை வள்ளல்***
***தானமென வேண்டுநர்கள் வேண்டுவன நல்கி***
***நானமிக நாறுகமழ் குஞ்சியவன் ஏறிய***
***ஊனமெனும் இன்றிஇனிது ஓடுகஇ துஎன்றான்."***

***(சீவகசிந்தாமணி, காந்த.இல, பா.எ.500)***

*காந்தருவதத்தையார் இலம்பகத்தில் சீதத்தன் பொருள் ஈட்டக் கடல் கடந்து செல்லும் முன் வேண்டியார்க்கு வேண்டிய நல்குகின்றான். இதற்கு மாரி உவமையாகக் கூறப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் எவ்வித வரையறையும் இல்லாது வேண்டியவர்க்கும் வேண்டாதார்க்கும் மாரியானது பொழிவது போன்று அனைவருக்கும் பொருள் நல்கும் கொடைத்திறன் உடையவன் சீதத்தன் எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. தன் கொடையால் தோன்றிய பெருமித உணர்வுடன் பொருளீட்டக் கலம் ஏறிச் செல்கிறான். இந்நிகழ்வு படிமப்பார்வையுடன் பெருமித உணர்வை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.*

*காந்தருவதத்தையின் பொருட்டு பல மன்னர்களுடன் சீவகன் வீரத்துடன் போரிடுகின்றான். போர்க்களத்தில் மண்ணுருண்டையை வைத்துச் சுற்றவிட்ட குயவனுடைய சக்கரம் போன்ற வாள்வலி படைத்த தேவதத்தனுடைய கடிவாளம் பூட்டிய குதிரை, மாலையணிந்த வெண்மையான வேற்படை வீரர்களின் கூட்டத்தைப் பிளந்து, யானைகளின் நெற்றியிலே தங்கள் கால் குளம்புகளைப் பதிய அழுத்தி, மன்னர்கள் அணிந்துள்ள போர்ப்பூவையும் முடிக் கண்ணியையும் சூளாமணியையும் சிதறி அடித்து எங்கணும் திரிந்தது (பாடல் எண் -786). இங்கு வீரத்தினால் விளையும் வெற்றி கண்டு பெருமிதம் கொள்ளும் நிகழ்வு சித்தரிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், அம்மன்னர்களைச் சீவகன் நோக்கி, "நீங்கள் எல்லாம் வீணையில் உங்களை வென்ற பாதச் சிலம்பொலிக்கும் சிறிய பாதங்களையுடைய தத்தையின் களிப்பூட்டும் அகன்ற கண்களைக் கண்டீர்கள். இப்போது அவள் விழிபோன்ற கூருடைய என் அம்புகளை விருந்தாய்த் தருகின்றேன்; ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறிச் செருக்குற்று நின்ற அரசர்களுக்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்ப ஒன்றும் இரண்டுமாக கொடிய அம்புகளை அளித்தான்.*

***"நுங்களை வீணை வென்ற நூபுரம் அடியினாள்தன்***
***வெங்களித் தடங்கண் கண்டீர் விருந்து எதிர் கொண்மின் என்னா***
***அங்களி அரசர்க்கு எல்லாம் ஒரொன்று இரண்டும் ஆகச்***
***செங்களிப் பகழி ஒப்பித்து உள்ளவாறு ஊட்டினானே"***

***(சீவகசிந்தாமணி, காந்த.இல, பா.எ.798)***

*யாழ்ப்போட்டியில் பங்கேற்கும் போது காந்தருவதத்தையின் கண்களாகிய அம்புகளைக் கண்டீர்கள். அவை கிடைக்கவில்லை. இப்போது நான் அம்புகளாகிய கண்களைத் தருகின்றேன்; பெற்றுக் கொள்ளுங்கள்" என்று நயம்படக் கூறி சீவகன் அம்புகளைச் செலுத்தினான் என எடுத்துக் கொள்ளலாம்.*

*யாவரொடும் ஒப்ப நில்லாது வீரத்தினால் 'தன்னேரில்லாத் தலைவனாய்' மேம்பட்டு நிற்கும் மாண்புடையவனாய் காப்பியத் தலைவன்சீவகன் இங்கு பெருமித உணர்வுடன் காட்சியளிக்கின்றான். குணமாலையார் இலம்பகத்தில் கட்டியங்காரனின் கொடைத்திறம் பற்றிக் கூறும் பொழுது திருத்தக்கதேவர் தக்க உருவகங்களின் வழி பெருமிதச் சுவையைத் தோற்றுவிக்கும் காட்சியைப் படிமமாக்கியிருக்கிறார்.*

*கட்டியங்காரனின் ஈகைக்குணத்தால் இல்லையெனக் கேட்டு வந்த இரவலர்க்கு யானை முதலான தங்கள் உடைமைகள் எல்லாம் கொடுத்ததன்றி, மேலும் அவர்கள் காலடியில் கொட்டிக் குவித்த பொற்கட்டிகளால் அவ்வீரவலர்களின் கெடாத தீவினையால் உண்டான வருத்தம் என்னும் நீரால் தாக்கப்பட்டு உடைந்த ஆசை என்னும் கடல் அடைக்கப்பட்டது.*

***"உவாமுதல் இரவலர்க்கு உடைமை உய்த்தவர்***
***கவான்முதல் கூப்பிய கனக மாமழையால்***
***தவாவினை அடைகரை தயங்கு சிந்தைநீர்***
***அவாவெனும் உடைகடல் அடைக்கப் பட்டதே."***

***(சீவகசிந்தாமணி, குண.இல, பா.எ. 913)***

*மேற்கூறப்பட்ட பாடலில் தாம் செய்த தீவினைகளால் உண்டான வறுமையால் தமக்கு ஏற்பட்ட அளவிடற்கரிய ஆசை கட்டியங்காரனின் கொடைத்திறத்தால் தீர்க்கப்பட்டது. இதில் வருத்தத்தை நீராகவும் ஆசையைக் கடலாகவும் கொடைப்பொருள் அதை அடைக்கும் அடைப்பானாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளவிதம் வீரத்தால் விளைந்த பொருளும் அதனால் செய்யப்பட்ட ஈகையும் அதன் வழிப்பிறந்த புகழும் உணர்த்தப்பட்டு பெருமிதத்தைத் தோற்றுவிக்கிறது. இக்காப்பியப்பாடலில் காட்சியுடன் கூடிய கருத்துப்படிமம் இடம் பெற்றுள்ளது.*

*அசனிவேகம் என்னும் யானையின் பிடியிலிருந்து குணமாலையைக் காப்பாற்ற படம் விரிந்த நாகத்தின் மேல் சினந்து பாயும் கருடனைப் போல, முன்னே நின்று மாலை என்னும் தோழியைச் சீறிச் சினந்து அவளைத்*

தந்தத்தால் குத்திக் கொல்லக் குனியும் போது, மணல் மேல் பாயும் கொலை வல்ல சிங்கத்தைப் போல அந்த யானையின் கோபம் பொங்க அதன் மத்தகத்தின் மீது குதித்து இடி போல முழக்கமிட்டான் சீவகன்

**படம் விரி நாகம் செற்றுப் பாய்துர கலுழன் போல**
**மடவரால் அவளைச் செற்று மதக்களிறு இறைஞ்சும் போழ்தில்**
**குடவரை நெற்றி பாய்ந்த கோளரி போன்று வேழத்து**
**உடல்சினங் குப்புற்று உருமென உரறி ஆர்த்தான்''**
**(சீவகசிந்தாமணி, குண.இல, பா.எ. 980)**

நாகம் மீது சினந்து பாயும் கருடன், மலை மீது பாயும் கொலை வல்ல சிங்கம்ப்। இடி போன்ற முழக்கம் ஆகிய உடைமைகளைக் கொண்டு சீவகன் வீரத்துடன் யானையை அடக்குவதைத் திறம்படக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதால் இது சிறந்த காட்சிசார் படிமமாக அமைந்து செவியுணர் படிமத்துடன் கூடிய பெருமித உணர்வை விளைவிக்கின்றது.

காப்பியங்களில் தலைவனின் 'தனிவீரம் காட்டல்' என்பது மரபாகும். தலைவனின் தன்னேரில்லாத் தன்மையைப் புலப்படுத்த காப்பிய ஆசிரியர்கள் பெரும்பாலும் 'களிறடக்கல்' என்ற வழிமுறையைப் பின்பற்றுகின்றனர்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களிலும் இவ்வுத்தி முறை கையாளப்பட்டுள்ளது.

**'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''**
**(புறம் 312)**

பதுமையார் எடுத்துரைக்கின்றது. இலம்பகத்தில் சீவகனது "ஒழுக்கம் பற்றி போன்ற மார்பு காட்சிப்படிமமாகவும் மலை மார்பு காட்சிப்படிமமாகவும் வலிமையை உணர்த்துகின்ற கருத்துப் படிமமாகவும் இடம்பெற்றுள்ளது. மார்பில் அணியப்பெற்ற மணம் வீசும் மாலை காட்சியுடன் இணைந்த முகர்ச்சிப் படிமமாக விளங்குகின்றது. தலைவன் மீது அதாவது தன் காதற் தலைவனானச் சீவகன் மீது பதுமை கொண்டிருக்கும் நம்பிக்கை உள்ளறை மூலம் விளக்குவதால் 'மனப்படிமமாகவும்' இதனை ஏற்றுக்கொள்ளலாம். அரச அன்னங்கள் தாமரை மலரினையே பெரிதும் விரும்பும். அதிகமாகப் பூத்துள்ள நீலோற்பவ மலரை அவை தேர்ந்தெடுக்க மாட்டாது எனப் பதுமை உள்ளறைப் படிமத்துடன் சீவகனின் ஒழுக்க மேன்மையை உரைக்கின்றார்.

**"விரைசெய் தாமரை மேல்விளை யாடிய**
**அரைச அன்னம் அமர்ந்துள் ஆயினும்**
**நீரை செய் நீலநி னைப்பில என்றனன்**
**வரை செய் கோலம ணங்கமழ் மார்பினான்''**
**(சீவகசிந்தாமணி, பது.இல, பா.எ.1401)**

ஏற்றதொரு உள்ளுறைஅமைந்தபாடலாக இப்பாடல் அமைந்துள்ளது. சீவகன் பொது மகளிரை நாடான் என்னும் கருத்தை உணர்ந்துகின்றது. படிம நயத்தோடு அமைந்துள்ள இவ்வுள்ளுறை உவமை சீவகனது ஒழுக்கத்தால் விளையும் புகழைக்காட்டி, சீவகன் பால் பெருமித உணர்வை ஏற்படுத்துகின்றது. இப்பாடலில் தேவர் காட்சிப்படிமத்தையும் கருத்துப்படிமத்தையும் கையாண்டுள்ள நயம் சிறப்பானது.

கனகமாலையார் இலம்பகத்தில் ஏமமாபுரத்தில் சுந்தரம் என்னும் யானையை சீவகன் அடக்கும் காட்சி தக்க உவமைகளோடு அமைந்த காட்சிப்படிமமாகவும், செவியுணர் படிமங்களாகவும் அமைகின்றன.

பெரிய மலை போன்ற மார்பினையுடைய சீவகன் பெரிய மலைமேல் பாய்கின்ற கூர்மையாக விளங்குகின்ற பற்களையுடைய சிங்கம் போல, அடக்குதற்குரிய அந்த யானையின் கழுத்தில் கட்டிய கயிற்றைப் பிடித்துக் கொண்டு விரைந்து அதன் மேல் ஏறினான். அவ்வளவில் கரையுடன் மோதும் அலைகளின் ஒலி போல அங்கு கூடியிருந்த மிகுதியான மக்கள் கூட்டம் ஆரவாரம் செய்தது.

**இறுவரை இவர்வதோர் இலங்கெயிற்று அரியென**
**உறுவரை மார்பினான் தூசங்கொண்டு ஒய்யெனப்**
**பெறலருங் குஞ்சரம் ஏறலில் பெருஞ்சனம்**
**அறைகடல் திரையொலித் தாங்கென ஆர்த்ததே.''**
**(சீவகசிந்தாமணி, கனக.இல, பா.எ.1833)**

"குழவியஞ் செல்வனோர் குன்று கொண்டு ஒய்யென
அழகிதாப் பறப்பதே போலவும் ஆர்புயல்
மழையைஓ யூர்ந் தோடுமோர் வானவன் போலவும்
எழுதலா கா வணமஓ இருந்தனன் என்பவே."
(சீவகசிந்தாமணி, கனக.இல, பா.எ.1838)

அப்பொழுது இளஞ்சூரியன் ஒன்று மலை ஒன்றைக் கவர்ந்து கொண்டு விரைவாக அழகுறச் செல்வது போன்றும், நீர் முகந்து செல்லும் மேகத்தோடு வித்தயாதரன் ஒருவன் பறந்து செல்வது போன்றும் திறமையுடையவனாய் யானை மீதேறிச் செல்லும் சீவகன் ஒவியத்தில் வரைய முடியாத பொலிவுடன் விளங்கினான்.

வலிய யானையை சிங்கம் (சீவகன்) தாக்குவது போல் தாக்கினான் என்பதுவும் இளஞ்சூரியன் (சீவகன்) மலையைக் (யானை)க் கவர்ந்தது என்பதுவும் மேகத்தோடு (யானை) வித்தியாதரன் (சீவகன்) ஒருவன் பறந்து சென்றான் என்பதும் உரிய உவமானங்களாக அமைந்து யானையை அடக்கும் காட்சியைக் கண்முன் படிமமாகக் கொணர்ந்து சீவகனது வீரத்தைக் காட்டி பெருமித உணர்வை நிலைநாட்டுகின்றன.

## முடிவு

மனித சமூகம் தன் பண்பாட்டு விழுமியங்களை அச்சமுகத்தில் நிகழ்த்தப்படும் நிகழ்வு வடிவங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். சீவகசிந்தாமணியின் காப்பியத் தலைவன் சீவகனது ஒழுக்கம், வீரம் கொடைத் தன்மை ஆகிய சிறந்த பண்புளை கூறும் போது திருத்தக்கதேவர்தக்க உவமை உருவகங்களின் வழி பெருமிதச் சுவை விளக்கியுள்ளார். அதிலும் குறிப்பாக, காப்பியத் தலைவனின் தனித்த வீரத்தை பெருமித உணர்வுடன் எடுத்துரைத்த விதம் காப்பிய இலக்கணங்களில் ஒன்றான 'தன்னேரில்லாத் தலைவனாய்' பெருமித உணர்வினை விளைவிப்பதாக அமைந்துள்ளது.

## துணைநூற்பட்டியல்


1. துரை. ராஜாராம்-சீவக சிந்தாமணி விளக்க உரை, முல்னல நிலையம், சென்னை
2. உ.வே. சாமிநாதையர் "சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்", தியாகராச விலாசம், சென்னை.
3. அன்னி தாமசு- "தமிழர் சமூகவியல்", உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவைம், சென்னை.
4. க. கைலாசபதி "சமூகவியலும் இலக்கியமும்" (தொகுதி 1), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
5. சு. சிலம்சோலி செல்லப்பன், "பெருந்தகை ஆராய்ச்சி", பாரதி பதிப்பகம், சென்னை.
6. வெ. இரா. சத்தியமூர்த்தி, ' இலக்கியத்தில் படிமம்
7. க.பூர்ண சந்திரன், "கவிதையியல்", உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.